## பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

# குற்றம் சாட்டப்பட்டவர்கள் அ.தி.மு.க. தொடர்புடையவர்களே!










| | |
|---|---|
| A1 சபரிராஜன் | A2 திருநாவுக்கரசு |
| A3 சதீஷ்குமார் | A4 வசந்த் |
| A5 மணிவண்ணன் | A6 பாபு |
| A7 ஹேரோன் பால் | A8 அருளானந்தம் |
| A9 அருண்குமார் | |

**பொ**ள்ளாச்சி பாலியல் வழக்கில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தொடர்புகொண்டுள்ளார்கள் என்று அறிந்தவுடன், அவர்களைக் காப்பாற்ற பழனிச்சாமி மேற்கொண்ட பித்தலாட்டங்களுக்கும் அளவில்லை; மூடி மறைக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கும் கணக்கில்லை!

அப்பொழுது தி.மு.க.வும் இதர எதிர்க்கட்சிகளும் நடத்திய போராட்டங்களின் விளைவாகத்தான் வேறு வழியின்றி பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. அதனை மக்கள் மறந்திருப்பார்கள் என நினைத்துக் கொண்டு நாடகமாடிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. இந்தப் பித்தலாட்டத்தை முதலமைச்சர் சுட்டிக் காட்டி பேசியதும் ஓடோடி வந்து அவதூறுகளை அள்ளி வீசி சென்றிருக்கிறார் பித்தலாட்டக்கார பழனிசாமி! பாதிக்கப்பட்ட பெண்ணின் தரப்பு பிப்ரவரி 24 ஆம் தேதி உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் தருகிறார். அந்தப் புகார், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்புக்கு எடப்பாடியின் போலீஸால் தரப்படுகிறது. புகார் தந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள். இப்படி தாக்கியவர் யார்? அ.தி.மு.க.வைச் சேர்ந்த 'பார்' நாகராஜன். பொள்ளாச்சி நகராட்சி 34 ஆவது வார்டு அ.தி.மு.க. அம்மா பேரவைச் செயலாளர் இவர். புகார் கொடுத்தவர்களை இவர் தாக்கினார். இந்த வழக்கில் இவர் கைது செய்யப்பட்டார். இவர் யார் என்று தெரிந்ததும், மறுநாளே ஜாமீனில் வெளியில் வந்துவிட்டார். இவரும் அ.தி.மு.க. அமைச்சர் வேலுமணியுடன் இருக்கும் படங்கள் இணையத்தில் இருக்கின்றன. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் இப்போது தண்டனை பெற்றுள்ள அனைவருக்கும் இவர் நண்பர்.

இதனை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையாகக் கொடுத்த பிறகுதான், அவர் மீது நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டு நீக்குகிறார் பழனிசாமி. ஆக, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அ,தி.மு.க. தொடர்புடையவர்கள்தான் என்பதற்கு இந்தப் புகைப்படங்களே ஆதாரம்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் திருவாச்சி ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து பெருந்துறை வட்டம், சீனாபுரம், நெட்டசெல்லாபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பெற்று கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்டம் சிறப்பு முகாம் ஐந்து ஊராட்சிகளில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமி தலைமை வகித்தார். ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கண்ணன் முன்னிலை வகித்தார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.

## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 98.31 சதவிகிதம் தேர்ச்சி!

# மாநில அளவில் முதலிடத்தைப் பெற்ற சிவகங்கை மாவட்ட மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்து!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

*சிவகங்கை, மே 18-*

*சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 98.31 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் முதலிடத்தைப் பெற்று சிவகங்கை மாவட்ட மாணவச் செல்வங்கள் சாதித்திருக்கிறார்கள்.



அத்தகைய சாதனையை புரிந்து, தமிழ்நாட்டு அளவில் முதன்மையான மாவட்டமாக கல்வி வளர்ச்சியில் நம்முடைய மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்கள், அதற்கு பாடுபட்ட தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உள்ளிட்ட கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் பெற்றோர்கள், எல்லாவற்றிற்கும் மேலான மாவட்ட ஆட்சியர் ஆகிய அனைவரையும் மனதார வெகுவாக பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டு (2024) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சிவகங்கை மாவட்டம் இரண்டிலும் இரண்டாம் இடம் பெற்றிருந்தது. இந்த ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆறாமிடத்தை பெற்று மனச்சோர்வு தந்திருந்த நிலையில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில் மாநில அளவில் சிவகங்கை மாவட்டம் முதலிடத்தை பெற்று மனச்சோர்வு அனைத்தையும் போக்கி மட்டற்ற மகிழ்ச்சியை அனைவருக்கும் அளித்துள்ளது என்பதை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அரசு பள்ளிகள் அளவிலான தேர்ச்சி விகிதத்தில் 97.49 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் சிவகங்கை மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது என்பதையும் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை புரிந்த மாணவச் செல்வங்கள் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அனைவரையும் பாராட்டுகிறேன். இம்மகிழ்ச்சி தொடர்ந்து நீடித்திட வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் திருமயம் வடக்கு ஒன்றியம் கழகம் சார்பில் குழிப்பிறையில் கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுகூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், தலைமை கழக பேச்சாளர் சு.பாலகிருஷ்ணன் சாதனை விளக்க உரையாற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் அ.சுப்பிரமணியன், திருமயம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கணேசன், திருமயம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆறு.அழகு(எ) சிதம்பரம், சே.கே.ஆர்.ராமசாமி மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் துணை தலைவர்கள், பாக முகவர்கள், பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.